**வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி**

**தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் - 2018**

**க.பொ.த உ/த பயிற்சி வினாக்கள் அலகு 2**

1) Mark 1 கணினியின் வடிவமைப்பாளர் …….. ஆவார்
   i. சார்லஸ் பாபேஜ் ii. பிளெயிஸ் பஸ்கால் iii. கொவாட் எய்கன்
   iv. அடா ஒகஜ்ரா லவ்லேஸ் v. வொன் நியூமன்

2) முதலாவது மின்னணு இலக்கமுறைக் கணினி
   i. ENIAC ii. UNIVAC iii. EDVAC iv. Mark 1 v. abacus

3) உள்ளீடு செய்வதற்கும் வெளியீட்டினை சேமிப்பதற்கும் துளை அட்டைகளை பயன்படுத்திய முதலாம் தலைமுறைக்கணினி
   i. ENIAC ii. UNIVAC iii. EDVAC iv. Mark 1 v. IBM 1602

4) பின்வருவனவற்றுள் சரியான கூற்றினை தெரிக
   i) முதலாம் மலைமுறைக்கணினிகள் திரிதடையங்களை அடிப்படையாகக் கொண்டவை
   ii) பஸ்காலின் பொறி முதலாம் தலைமுறைக்கணினியாகும்.
   iii) இரண்டாம் தலைமுறைக்கணினிகள் வெற்றிடக்குழாய்களை அடிப்படையாக கொண்டவை
   iv) மூன்றாம் தலைமுறைக்கணினிகள் ஒருங்கிணை சுற்றுக்களை அடிப்படையாகக் கொண்டவை.
   v) பகுப்புப்பொறி முதலாம் தலைமுறைக்கணினிக்கு ஓர் உதாரணமாகும்.

5) நான்காம் தலைமுறைக்கணினிகளில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம்
   i) வெற்றிடக்குழாய் iii) மிகப்பெரியளவு ஒருங்கிணைந்த சுற்று v) நுண்செயலிகள்
   ii) திரிதடயங்கள் v) ஒன்றிணைந்த சுற்றுக்கள்

6) பின்வருவனவற்றுள் நுண் கணினிவகையை சாராத கணினி
   i) மேசைக்கணினி iii) குறிப்புப்புத்தகம் v) கையடக்கக்கணினி
   ii) மடிக்கணினி iv) சிறுகணினி

7) தொடுதிரை இடைமுகத்துடன் கூடிய , கொண்டு செல்லக்கூடிய வடமில்லா இணைப்புடைய தனிநபர்கணினி
   i) வில்லைக்கணினி iii) குறிப்புப்புத்தகம் v) Phablet
   ii) சுட்டிகைத் தொலைபேசி iv) மீக்கணினி

8) பின்வருவனவற்றுள் சுட்டும் சாதனம் அல்லாதது
   i) சுட்டி iii) தொலையியக்கி v) தொடுநிரப்பிடம்
   ii) சுட்டிகை அட்டை வாசிப்பான் iv) தொடுதிரை

9) வருடி வகையல்லாத உள்ளீட்டுச் சாதனம் எது?
   i) காந்தமைவரியுரு வாசிப்பான் iii) ஒளியியல்குறி கண்டறிதல் v) இலக்கமுறை படக்கருவி
   ii) ஒளியியல் வரியுரு கண்டறிதல் iv) சமதளபடுகை வருடி

10) TFT தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கணினித்திரை
   i) கதோட்கதிர் திரை iii) ஒளிகாலும் இருவாயி v) தொடுதிரை
   ii) திரவப்பளிங்குதிரை iv) பிளாஸ்மா திரை

11) ஒளியியல் ஊடக சேமிப்புச் சாதனங்களில் உள்ளடங்காதது

i) CD -ROM
iii) Blu- Ray
v) DVD - ROM
ii) DVD -RW
iv) Flash drive

12) பின்வருவனவற்றுள் நிலையற்ற நினைவகம் அல்லாதது

i) பதிவிகள்
iii) பதுக்கு நினைவகம்
v) SRAM
ii) DRAM
iv) ROM

13) பின்வருவனவற்றுள் ஒரு பிட்டுக்கான செலவு அதிகரிக்கும் ஒழுங்கு

i) காந்தத்தட்டு, பிரதான நினைவகம், பதுக்கு நினைவகம், பதிவிகள்
ii) திடநிலை சேமிப்பு, காந்தத்தட்டு, ஒளியியல் வட்டு, காந்த நாடா
iii) காந்த நாடா, ஒளியியல் வட்டு, பதிவி, பதுக்கு நினைவகம்
iv) பதிவி, பதுக்கு நினைவகம், ஒளியியல் வட்டு, பிரதான நினைவகம்
v) திடநிலைசேமிப்பு, பிரதான நினைவகம், பதுக்குநினைவகம், காந்த நாடா

14) நுண்செயலியினுள் காணப்படும் பதுக்கு நினைவக வகை

i) L1 ii) L2 iii) L3 iv) L1, L2 V) L2, L3

15) பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A – எழுமாற்று பெறுவழி நினைவகம் ஓர் அழிதகா நினைவகமாகும்.

B – பதுக்கு நினைவகம் ஓர் அழிதகு நினைவகமாகும்.

C – பதியி ஓர் அழிதகா நினைவகமாகும்

சரியான கூற்று

i) A மட்டும் ii) B மட்டும் iii) C மட்டும் iv) A, C மட்டும் V) A, B,C அனைத்தும்

16) கணினியின் மையவழிமுறை அலகு தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் பிழையானது/பிழையானவை?

A – கணித ரீதியான கணித்தல்களை எண்கணித தர்க்க அலகு ஆற்றுகின்றுத.

B - அறிவுறுத்தல்களினது நிறைவேற்றுகையின் போது கட்டுப்பாட்டலகு தரவினை தற்காலிகமாக வைத்திருக்கிறது.

C – கணித ரீதியிலான கணித்தல்களை பதியி ஆற்றுகின்றது

17) பின்வரும் துணைத்தேக்கக சாதனங்களில் ஏத வரிசைமுறையான (Sequential) தரவுப்பெறுவழி முறையினை மாத்திரம் பயன்படுத்துகிறது

i) வன்வட்டு
iii) காந்த நாடா
v) இறுவட்டு
ii) நெகிழ்வட்டு
iv) பளிச்சீட்டு செலுத்தி

18) எழுமாற்று அணுகல் நினைவகத்தினது (RAM) கொள்ளளவு ….. எனும் அலகிலும், அதன் கதி ….. எனும் அலகிலும் முறையே ஒப்பிடப்படுகிறது. இடைவெளிகளில் வரும் பொருத்தமான பதங்கள் முறையே

i) GB, KB
iii) GB, MHz
v) MHZ, GB
ii) Kbps, Bytes
iv) Gbits, Mbps

19) பின்வருவனவற்றுள் எது DVD இன் ஓர் வகையான பொதுவில் கருதப்படுவதில்லை?

i) DVD- ROM
iii) DVD - RAM
v) DVD- R
ii) DVD- RW
iv) DVD - W

20) பின்வரும உள்ளீட்டு சாதனங்களுள் எவை நேரடியாக தரவை உள்ளீடு செய்யும்?

A – பட்டைக்குறிமுறை வாசிப்பான்

B – சாவிப்பலகை

C – காந்த வரியுரு வாசிப்பான்

D – ஒளியியல் குறி கண்டறிதல்

i) A,C மாத்திரம் iii) B,C மாத்திரம் v) C,D மாத்திரம்

ii) A,C,D மாத்திரம் iv) A,B,C மாத்திரம்

21) கணினி ஒன்றினது பின்வரும் செயற்பாடுகளை கருதுக.

A – வனவட்டிலுள்ள தரவுகள் நேரடியாக மையமுறைவழியாக்க அலகிற்கு செல்கின்றன

B – பதுக்கு நினைவகம் காணப்படுவதால் எழுமாற்று பெறுவழி நினைவகம் அவசியமில்லை

C – உள்ளீட்டு சாதனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற உள்ளீகள் முதலில் பிரதான நினைவகத்தில் மேலேற்றப்படுகின்றன.

i) A மாத்திரம் iii) A,C மாத்திரம் v) C மாத்திரம்

ii) A,B மாத்திரம் iv) A,B,C அனைத்தும்

22) ….--------------- ஆனது லேசர் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி தரவை வாசிக்கின்றது. இடைவெளிக்கு பொருத்தமான பதம்

i) இறுவட்டு iii) வன்வட்டு v) காந்த நாடா

ii) பளிச்சீட்டு நினைவகம் iv) நெகிழ்வட்டு

23) பின்வரும் சோடிச் சாதனங்களுள் எது வரியுருக்களை (Characters) உள்ளீடு செய்யவும், உருக்களை வரையவும் முறையே பயன்படுத்தப்படும்?

i) Mouse,Keyboard iii) Webcamera, Mouse v) Scanner, Mouse

ii) Keyboard, Joystick iv) Touch screen, Lightpen

24) DRAM உடன் ஒப்பிடும் போது SRAm தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் சரியானது

i) செலவு குறைவானது iii) அடர்த்தி அதிகமானது v) மீளளிப்பு தேவைப்படும்

ii) கொள்ளளவு அதிகமானது iv) கதி அதிகமானது

25) கணினியில் பதுக்கு நினைவகம் பயன்படுத்தப்படுவது

i) மிக அடிக்கடி பெறும் தரவுகளை தற்காலிகமாக சேமித்தல்

ii) மிக அடிக்கடி பெறும் தரவுகளை நிரந்தரமாக சேமித்தல்

iii) மிக குறைவாக பெறும் தரவுகளை தற்காலிகமாக சேமித்தல்

iv) மிக குறைவாக பெறும் தரவுகளை நிரந்தரமாக சேமித்தல்

v) துணைத்தேக்கக சாதனங்களுக்கு பதிலாக தரவுகளை சேமித்தல்

26) கணினி நினைவகங்களின் பெறுவழிக்கதி தொடர்பான பின்வரும் கூற்றுக்களை சரியானதை தெரிக.

A – தற்போக்கு பெறுவழி நினைவகத்தின் கதியினை விட பதுக்கு நினைவகத்தின் கதி உயர்வானது

B – தற்போக்கு பெறுவழி நினைவகத்தின் கதியினை விட பதியியின் கதி குறைவானது

C – பதுக்கு நினைவகத்தின் கதியினை விட பதியியின் கதி உயர்வானது

i) A மாத்திரம் iii) B மாத்திரம் v) A,B மாத்திரம்

ii) A,C மாத்திரம் iv) A,B,C அனைத்தும்

27) இயங்குநிலை எழுமாறு அணுகல் நினைவகம் (DRAM ) , நிலையியல் எழுமாறு அணுகல் நினைவகம் (SRAM) தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A – பதியிகள் DRAM இனால் தயாரிக்கப்பட்டவை

B – DRAM ஆனது SRAm இலும் வேகமானது

C – DRAM ஆனது SRAM ,லும் அதிக அடர்த்தியானது (dence)

i) A மாத்திரம் iii) B மாத்திரம் v) A,B மாத்திரம்
ii) C மாத்திரம் iv) B,C மாத்திரம்

28) பின்வரும் தரவுத் தேக்கக சாதனங்களில் எது மிக விரைவாக தற்போக்கு பெறுவழியை வழங்குகின்றது?

i) முதன்மை நினைவகம் iii) வன்வட்டு v) இறுவட்டு
ii) காந்தத்தட்டு iv) பளிச்சீட்டு செலுத்தி

29) CPU இனுள்ளே இடப்படும் (fetched) அறிவுறுத்தல்களை குறியவிழ்க்கும் (Decode) கூற்றுக்கு வழங்கும் பெயர்

i) முதன்மை நினைவகம் iii) பதிவி v) எண்கணித தர்க்க அலகு
ii) கட்டுப்பாட்டு அலகு iv) செய்நிரல் எண்ணி (Program counter)

30) பின்வரும் பதங்களை கருதுக.

A – உள்ளீ:டு B – வருவிளைவு C – தேக்ககம் D – முறைவழி

மேற்குறித்தவற்றுள் எது ஒரு முறைமைக்கு அவசியமான கணினியின் கூறுகள்

i) A,B மாத்திரம் iii) A,B,C மாத்திரம் v) A,C,D மாத்திரம்
ii) B,C ,D மாத்திரம் iv) A,B,C,D அனைத்தும்

<u>கட்டமைப்பு வினாக்கள்</u>.

1) கீழேயுள்ள பட்டியலில் நிரல் A இற்கு பொருத்தமான நிரல் B இனை நிரப்புக.
( John V. Atanasoff, EDVAC, முதலாவது கணினிச் செய்நிரலாளர், Turing Machine, Analytical engine, முதலாவது நுண்முறைவழியாக்கி , Blaise Pascal, துளையிடப்பட்ட அட்டை )

| | நிரல் A | நிரல் B |
|---|---|---|
| | John Von Neumann | |
| | Intel 4004 | |
| | Lady Ada lovelace | |
| | Alan Turning | |
| | Dr.Herman Hollerith | |
| | Charles Babbage | |
| | Adding Machine | |
| | ABC | |

2) துணைக்களஞ்சிய சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்ற மூன்று ஊடகத்தொழில்நுட்பவியல்களை கூறி ஒவ்வொன்றிற்கும் ஓர் உதாரணம் தருக.
3) கோட்டுச் சட்டக கணிமை (Grid Computing ) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?